கட்டுதல், சலவைக் கூடம், மருந்துகள் பாதுகாப்பாக, மருத்துவ கருவிகள் பாதுகாப்பாக இருக்க தனி அறை. 6 வண்டிகள் நிறுத்த கெட்டில் கட்டுவது போன்ற பல்வேறு குறிப்புகள் அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் அரசினுடைய நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இவைகள் எல்லாம் உடனடியாக செய்ய முடியாது. அரசு அவ்வப்போது நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக இவைகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்துப் பழுதுபார்க்கும் பணிமனை.

*6474 திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளை கருவிகளை பராமரித்து பழுதுபார்க்கும் பணிமனை, தொழிற்கூட தகராறு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தும் அச்சட்டம் அமலாக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அச்சட்டத்தை அமாலாக்கி, பணி நிரந்தரம், வருடாந்திர ஊதிய உயர்வு, இ. எஸ், ஐ. சலுகை அனுமதித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்து பழுது பார்க்கும் பணிமனை, தொழிற்கூடத் தகராறுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை சட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன்.

* 5274 திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு செய்தி பற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன் 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டத்திற்கு முரணாக நடப்பதாக புகார் அரசுக்கு வந்துள்ளதா?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 10]

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது தொடர்பான விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

சென்னை. சதர்ன் இரயில்வே மஸ்தூர் யூனியன், சங்க விதிகளுக்கு மாறாக செயல்படுவதாக புகார் வந்ததை அடுத்து சங்கத்தின் பதிவு 23—5-89 அன்று சென்னை, முதல் தொழிலாளர் துணை ஆணையரால் ரத்து செய்யப்பட்டு, அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்திரவை எதிர்த்து மேற்கண்ட சங்கம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டினை அடுத்து, தொழிலாளர் துறை துணை ஆணையரின் 23—5—89-ம் நாளைய உத்தரவு மறு உத்தரவு வரை உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. இதற்கிடையில் (அச்சங்கம், துணை ஆணையருக்கு, ரத்து செய்யப்பட்ட சங்கத்தின் பதிவினை மீண்டும் பெறுவதற்கு முறையீடு செய்தது. இதனை பரிசீலித்த பிறகு, துணை ஆணையர் தனது 20—6—89ம் நாளைய உத்தரவில் 23—5—89 அன்று பிறப்பித்த தனது முதல் உத்திரவை தள்ளுபடி செய்து அதே பதிவு எண்ணைக் கொண்டு சங்கம் மீண்டும் செயல்பட உத்தரவு வழங்கினார். ஆனால், கடைசியாக துணை ஆணையர் 20—6—89-ல் வழங்கிய உத்தரவிற்கு எதிராக திரு. டி. முனிரத்தினம் என்பவர் சென்னை, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து 7-9—89 அன்று துணை ஆணையரின் 20—6-89 நாளைய உத்தரவிற்கும், இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளார். எனவே, தற்போதுள்ள நிலைப்படி, உயர்நீதி மன்றத்தின் இறுதி உத்திரவு பெறப்பட்ட பின்புதான் சங்கத்தின் சட்டப்படியான நிலை பற்றி உறுதியாகக் கூற இயலும்.

திருவள்ளுவர் சிலை

* 6838 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை தொட்டுள்ள கடலில் உள்ள பாறையில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பட உள்ளது?